**சாட்சிகளின் வாக்குமூலம்**

பாகம் III சுற்றறிக்கை உத்தரவு 2 (I) உ.வி.மு.ச.

பிரிவு 1 மற்றும் உ.வி.மு.ச.

E.A.No.12/2013 In

E.P.No.9/2012 in

O.S.No.1100/2008

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்

வாக்குமூலம் – ம.சா–1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தமிழரசி | மதம் | : | |
| த/க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலுகா | : | பல்லடம் | மாவட்டம் | : | திருப்பூர் |

1987ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 10ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு 2025 ஆண்டு ஆகஸ்ட் மாதம் 1ம் நாள் சாட்சியம்.

---

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் மனுதாரர் / 3ம் தரப்பினர் ஆவேன். என்னுடைய முதல் விசாரணையை நிரூபண வாக்கு மூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும், படித்துப்பார்த்து தான் கையெழுத்து போட்டேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். கீழ்க்கண்ட ஆவணங்கள்

1. 07.12.2012 தேதியிட்ட எனது பெயரிலான கிரையப் பத்திரத்தின் சான்றிட்ட நகல் ஆவண எண்.13948/2012.
2. 01.11.2010 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவண எண்.15607/2010 சான்றிட்ட நகல்.
3. 30.12.2010 தேதியிட்ட சின்னசாமிக்கு எழுதிக் கொடுக்கப்பட்ட கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட ஆவண எண்.19335/2010.
4. 15.04.1980 தேதியிட்ட விடுதலை பத்திரத்தின் நகல் ஆவண எண்.8/1980.
5. 25.09.1990 தேதியிட்ட விடுதலைப் பத்திரத்தின் சான்றிட்ட நகல் ஆவண எண்.81/1990.
6. 03.01.1991 தேதியிட்ட வசந்திக்கு பாத்தியப்பட்ட உயிலின் சான்றிட்ட நகல்.

7. 15.01.1994 தேதியிட்ட இறப்புச் சான்றிதழ் சான்றிட்ட நகல்.

8. குடிநீர் வரி இரசீது எண்ணிக்கை 3

9. மின் கட்டண இரசீது எண்ணிக்கை 5

10. 26.12.2012 தேதியிட்ட சொத்து வரி இரசீதிற்கான உத்தரவு,

ஆகியவற்றை மனுதாரர் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன். மேற்படி ஆவணங்கள் முறையே **ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.10** ஆவணங்கள் ஆக குறியீடு செய்யப்படுகின்றன.

**எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2025.08.01 18:21:13 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.